**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையை மின்சார வாரிய அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**106—**

**சாலையை அகலப்படுத்துதல்**

***32256**—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பத்மநாபபுரம் தொகுதி, பூவன்கோடு—ஆற்றூர் இணைப்புச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்த அரசு முன்வருமா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது ?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதி, டேப்சாலை என்று அழைக்கப்படும் பூவன்கோடிலிருந்து ஆற்றூர் இணைப்புச் சாலையை ரூபாய் 109 இலட்சம் செலவில் இருவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி முடிக்கப்பட்டு, தற்போது போக்குவரத்துக்குப் பயன்பாட்டில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

2014 ஜூலை 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதி, பூவன்கோடு—ஆற்றூர் இணைப்புச் சாலையை அண்மையில் அகலப்படுத்தியபோது சாலையின் இரு பக்கமும் அகலப்படுத்தாமல், ஒரு பக்கம் மட்டுமே அகலப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இருவழிச் சாலைக்குத் தேவையான இட வசதி அமையவில்லை. அதிக அளவில் பேருந்துகளும், கனரக வாகனங்களும் இச்சாலை வழியாக வந்து செல்வதால், இந்தச் சாலையின் மறுபக்கமும் அகலப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, பூவன்கோடு—ஆற்றூர் இணைப்புச் சாலையானது நெடுஞ்சாலைத் துறை, நாகர்கோவில் கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையாகும். திங்கள் சந்தையிலிருந்து திருவட்டார் சாலை, மார்த்தாண்டம் பேச்சிப்பாறை சாலையை இணைக்கும் டேப்சாலை கிலோமீட்டர் 0/0—விலிருந்து 3/9 கிலோ மீட்டர் வரை ஆகும். இச்சாலை ஒருவழித்தட 3.7 கிலோ மீட்டர் அகலம் கொண்ட தார்ச்சாலை ஆகும். இச்சாலையை 2013—2014 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 109 இலட்சம் செலவில் ஒருவழித் தடத்திலிருந்து இடை வழித் தடமாக அதாவது 5.50 மீட்டர் அளவுக்கு அகலப்படுத்தப்பட்டு, போக்குவரத்துப் பயன்பாட்டில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10—15*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பகுதியில்தான் சாலை விரிவுப்படுத்தப்பட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒருவழித் தடத்திலிருந்து இடை வழித் தடமாக மாற்றும்போது ஒரு பகுதியில்தான் சாலையை விரிவுப்படுத்த முடியும். அதேநேரத்தில்*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே போக்குவரத்து அதிகமாக இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில்தான் ஒருவழித் தடங்கள் இடைவழித் தடங்களாக மாற்றியமைக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் போக்குவரத்துச் செறிவு அதிகமாக ஏற்படும்போது, அந்த இடைவழிச் சாலையை இருவழித்தடச் சாலையாக மாற்றியமைக்க, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில் மேய்க்கால் மண்டபம்-தக்கலை குறுகிய நெடுஞ்சாலையில், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளதால், ஏராளமானப் பேருந்துகளும், கனரக வாகனங்களும் வந்து செல்லும் போக்குவரத்து நெரிசல்மிக்க சாலையாகக் காணப்படுகிறது. ஆகவே, இந்தச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்தி, தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மூன்றாண்டுகால பொற்கால ஆட்சியில்தான், தமிழகத்தில் சுமார் 5,755 கிலோ மீட்டர் அளவுக்கு சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2011—2012 ஆம் ஆண்டு 1708.88 கிலோ மீட்டர் அளவுக்கு சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன, 2012—2013 ஆம் ஆண்டு 1659.37 கிலோ மீட்டர் அளவுக்கு சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன, 2013—2014 ஆம் ஆண்டு 2386.98 கிலோ மீட்டர் அளவுக்கு சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, பொதுமக்கள் சிரமமில்லாமல் அகலமான*

2014 ஜூலை 11]

சாலைகளில் இன்றைக்கு பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். வருகின்ற 2014—2015 ஆம் ஆண்டு மேலும் 1,500 கிலோ மீட்டர் சாலைகள் அகலப்படுத்தப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்களால் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்துள்ளார்கள். போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில் அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் இணையில்லா மாநிலமாய் தமிழ் மண்ணை தலைநிமிரச் செய்திட, போர்ப் பரணி பாடிவரும் புரட்சிகளின் உதயம் மாண்புமிகு அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்போரை உயர்த்துகிற ஏணியாகி! உழல்பவரை கரைச் சேர்க்கும் தோணியாகி! உலகத்தரம் வாய்ந்த கல்வியைத் தரும் வாணியே மாண்புமிகு அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பிட்டுச் சொல்வதற்கு ஒருவருக்கும் நிகரில்லா ஞானியே மாண்புமிகு அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஆக்குவதற்கு 20 கிலோ விலையில்லா அரிசி தந்து, அறுசுவைக்கு ‘அம்மா உப்பு’ தந்து, தாகம் தீர்க்க ‘அம்மா தண்ணீர்’ தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) மதிய உணவும் தந்து, பசியாற்றி படிப்பும் தந்து, காலணி முதல் கணினிவரை கல்விக்கு அள்ளித் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) வயிற்றுக்கும் செவிக்கும் சேர்த்து அன்னமிடும் அட்சயமே! மாண்புமிகு அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) “அம்மா உப்பு” இல்லா அடுப்பங்கரை ஆரோக்கியம் இல்லா சமையலறை, “அம்மா உணவகம்”, “அம்மா குடிநீர்”, “அம்மா உப்பு”, “அம்மா மருந்தகம்”, “முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்”, மகப்பேறு நிதியுதவித் திட்டம், பள்ளி செல்லும் மாணவ—மாணவியருக்குக் காலணி, சீருடை, இலவச புத்தகங்கள், இலவச நோட்டுப் புத்தகங்கள், கலர் பென்சில்கள், Geometry box இவற்றையெல்லாம் எடுத்துச்செல்ல ஒரு பை, பிள்ளைகளையும், பிள்ளைகளின் புத்தகப் பையையும் சுமந்து செல்ல விலையில்லா சைக்கிள், படித்து வேலையில்லாமல் இருக்கின்ற பிள்ளைகளுக்கு

மாதாமாதம் உதவித் தொகை, பெண்ணுக்குத் திருமண நிதி உதவி, தாலிக்குத் தங்கம், ஏழைகளின் சமையலறைக்கு மிக்சி, கிரைண்டர், (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஏழையின் படுக்கையறைக்கும் மின்விசிறி, ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த தாத்தா, பாட்டிகளுக்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகை, (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றை ஏழை மக்களுக்கு அள்ளித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனித்தே நின்றார், தருமத்தைக் காத்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

தன் சாதனைகளை முன்வைத்து தன்னந்தனியாக உழைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்தின் உள்ளம் எல்லாம் நிலைத்தார். தனக்கு நிகர் ஒருவரும் இல்லை என்பதை தமிழகத்தின் குரல்வழியே தரணிக்கே உரைத்து, வரலாறு காணாத இமாலய வெற்றி பெற்றார் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியில் வெற்றி, முல்லைப் பெரியாறில் வெற்றி, நெய்வேலிக்கே வேலி போட்ட நிகரில்லா வெற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கிடைத்த வெற்றி, மாண்புமிகு அம்மா அவர்களின் உண்மைக்குக் கிடைத்த வெற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய உழைப்புக்குக் கிடைத்த வெற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் தர்மத்திற்குக் கிடைத்த வெற்றி, மாண்புமிகு அம்மா அவர்களின் சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி இரு விரல் ஆயுதம் கொண்டே, இப்படி இரு விரல் ஆயுதம் கொண்டே மக்கள் உரிமையை மீட்பதற்கு ஓயாது உழைக்கின்ற போர் முரசே மாண்புமிகு அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10—20*

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, திருத்தணி மலைப் பாதை வழியாக காஞ்சிபுரம்—அரக்கோணம் செல்லும் இணைப்புச் சாலை 20 அடி அகலமே கொண்ட குறுகிய சாலையாக இருக்கிறது. இது அனைவருக்கும் தெரிந்த உண்மை. அந்தக் குறுகிய சாலையால் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. ஆகவே, அந்த இணைப்புச் சாலையை 4 வழிச் சாலையாகவோ அல்லது அகலப்படுத்தவோ அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

TRUTH ALONE TRIUMPHS

2014 ஜூலை 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமான வாகனங்கள் செல்வதால், அந்தச் சாலையை அகலப்படுத்த வேண்டும் என்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். இதனை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தப் பாதையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகராட்சியில், நெடுஞ்சாலைத் துறை கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய இரயில் நிலையம் செல்லக்கூடிய சாலையின் நடுவிலே டிவைடர் என்ற ஒரு கட்டையை 3—4 ஆண்டுகளுக்கு முன்பாக அமைத்து இருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலே மண்டபங்கள் இருக்கக்கூடிய காரணத்தினாலே விபத்துகளைத் தடுப்பதற்காக அது அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், அந்த டிவைடர் இருக்கக்கூடிய காரணத்தினால்தான் விபத்துகள் அதிகமாக நடைபெறுகின்றன என்ற அச்சம் பொதுமக்களிடையே இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, அது தேவையில்லை என்ற பட்சத்தில் அதை எடுத்துவிடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதியிலே டிவைடர் வைத்திருப்பதாகவும், அதனால் விபத்து ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். ஆகவே, அதனை துறை சார்ந்த உயர் அதிகாரிகள்மூலமாக ஆய்வு செய்து,*

அந்த ஆய்விலே அப்படி விபத்து ஏற்படுவதற்கு அது காரணமாக இருக்குமானால், அதை அகற்றுவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சி மாற்றம் ஏற்பட்ட முதல் ஆண்டிலேயே நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 110 விதியின்கீழ் சிவகங்கை புறவழிச் சாலை நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவித்து 1 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால், அந்தப் பணி இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது. இந்த ஆண்டில் தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிவதோடு, மானாமதுரை—சூராணம் சாலையை அகலப்படுத்தித் தர வேண்டும். அதோடு கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்துவதற்கு நெடுஞ்சாலைத் துறையோடு இணைத்து பராமரிப்பு செய்வதற்கான நடவடிக்கை, திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் 4 உறுப்பினர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக சிவகங்கைக்கு புறவழிச் சாலை அமைக்கப்படும் என்ற அறிவிப்பைத் தந்தார்கள். அந்த அறிவிப்பின்படி இப்போது சிவகங்கை புறவழிச் சாலை நில எடுப்புப் பணிக்காக 5 கிராமங்களில் 15(2) அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. 15(1) அறிக்கை செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு சாலைகளைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். போக்குவரத்து நெரிசலின் அடிப்படையில்தான் ஒரு வழித் தடத்திலிருந்து இடைவழித் தடமாகவும், இடைவழித் தடத்திலிருந்து இரு வழித் தடமாகவும், இரு வழித் தடத்திலிருந்து 4 வழித்

தடமாகவும் மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன. அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பின், அந்தப் பகுதியை ஆய்வு செய்து, அந்த ஆய்வில் தெரியவந்தால், அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

**திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்—கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலை 209—ல் ஒட்டன்சத்திரம் நகரம் அமைந்துள்ளது. தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் அங்கேதான் அமைந்துள்ளது. தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரம் போன்ற சமயங்களில் இலட்சக்கணக்கான பக்தர்கள் அந்த நகரின் வழியாகத்தான் நடந்து செல்கிறார்கள். கடந்த 2009 ஆம் ஆண்டு ஒட்டன்சத்திரத்தில் புறவழிச் சாலை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி தந்து, இப்போது நிலம் கையகப்படுத்துகின்ற பணி முடியும் தருவாயில் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் வலியுறுத்தி, இந்த ஆண்டு அந்தச் சாலையை அமைப்பதற்கு நிதியைப் பெற்று, ஒட்டன்சத்திரம் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான புறவழிச் சாலையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் நகரத்திற்கு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதை மத்திய அரசிடம் வலியுறுத்தி, விரைவாக அங்கே புறவழிச் சாலை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*